
12வது பதினெண்சித்தர் பீடாதிபதி, ஞாலகுரு
<u>சித்தர் அரசயோகிக் கருவூரார் அவர்கள் அருளியது</u>

# <u>சித்தரடியான் நிலை விளக்கம்</u>

## <u>குருபாரம்பரிய வாசகம்</u>

ஓம் குருவே போற்றி! ஓம் குரு குரு வாழ்க! ஓம் குருவே எல்லாம்!



**இந்து மதத் தந்தை, இந்து வேத நாயகம்,**
**12வது பதினெண்சித்தர் பீடாதிபதி, மடாதிபதி, ஞானாச்சாரியார்,**
**ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார்.**
**(சென்னை செங்குன்றத்தை அடுத்த காரணைடையில் கோயில் கொண்டருளுபவர்)**

மெய்யான இந்துமத ஆண்டு 43,73,119 **கார்த்திகை** மாதம்.

# இந்து இலக்கியக் கழகம்

காணிக்கை: ரூ 10/-

# உள்ளுறை

1. “சித்தரடியான் நிலை விளக்கம் - குருபாரம்பரிய வாசகம்” - 03/05/1983இல் குருதேவர் அவர்கள் தமது மதுரைச் சித்தரடியான் மூலம் அனைவருக்கும் வழங்கிய விளக்கங்கள்.
2. “நலம் பாராட்டுத் திருவோலை - சித்தரடியான் நிலை விளக்கம்” - 07/05/1983இல் குருதேவர் அவர்கள் அருள்மிகு வீரமாகாளி சன்னிதானம் அவர்களுக்கு எழுதிய அஞ்சல்.
3. “சித்தரடியான் நிலை விளக்கம் - 2” - 08/05/1983இல் குருதேவர் அவர்கள் அனைத்து மாணாக்கர்களுக்கும் எழுதிய சுருக்கமான அஞ்சல்.
4. “செயல் விளக்கத் திருவோலை - சித்தரடியான் நிலை விளக்கம் - 3” - 08/05/1983இல் குருதேவர் அவர்கள் தமது மதுரைச் சித்தரடியான் ஒருவருக்கு எழுதிய அஞ்சல்.
5. “சித்தரடியான் நிலை விளக்கம் - 4” - 23/05/1983இல் குருதேவர் அவர்கள் தமது அனைத்து மாணாக்கர்களுக்கும் எழுதிய விரிவான அஞ்சல்.

ஓம் தாத்தா கருவூரரே போற்றி!

# சித்தரடியான் நிலை விளக்கம்

## குருபாரம்பரிய வாசகம்

3/5/83,
அரசு மருத்துவமனை,
சென்னை-3.

இன்றைய குருமகாசன்னிதானம் ஞாலகுரு சித்தர் கருவூரர் கூற சித்தர் மகன் சித்தரடியார் சோ. இரவீந்திரன் எழுதிக் கொள்வது. இது அவசர அவசிய விளக்கமாக சென்னை அரசினர் பொது மருத்துவமனையில் (G.G.H. 43-B வார்டு அறை எண்:14, அரசு மருத்துவமனை, சென்னை-600003.) இருந்து அருள்மிகு ஆலவாய்க் கொற்றவை சன்னிதானம் அவர்கள் சமூகத்திற்கு அனுப்பப் படுகின்றது.

1. தாத்தாக்கள் ஆத்தாக்கள் அருளால்தான் அனைத்தும் நடைபெறுகின்றன என்ற பேருண்மைதான் சித்தர் நெறியைச் சார்ந்த அனைத்து இயக்கங்களுக்கும் உயிரும், உடலும், அறிவும், உணர்வும், செயலும் ஆகும். இவற்றைப் புரியாதவர்கள் பரந்துபட்ட கடலின் நுரை கரைக்கு வருவதுபோல; கரை புரண்டு வரும் ஆற்றின் நுரை கரையோரங்களில் தங்குவது போல் தங்கிடுவர் என்பதே குருபாரம்பரிய வாசகம்.

2. தாங்கள் வேறு, குரு வேறு, திரு வேறு என்று பிரித்துப் பிரித்து உணராமல் அனைத்தும் ஒன்றே என்று உணருகின்ற நிலைதான் சித்தரடியான் நிலை. இந்நிலையை சாதாரண மனிதர்கள் அனைவருக்கும் வழங்கியே ஆக வேண்டும் என்ற வள்ளல்

பண்பினுல்தான் அச்சமோ, கூச்சமோ, இச்சையோ கடந்து ‘குருவாசக உறுதி மொழிகள்’ பல அடியான்களிடம் வாங்கப் படுகின்றன. அவை உலகியலுக்கும் உலகத்தாருக்கும் அநாகரீகமானவையாக, முறையற்றவையாக, நெறியற்றவையாக, அருவெறுக்கத் தக்கவையாக, ஏமாற்றுக்களாக, மோசடிகளாக, தீய நாற்றமுடையவைகளாக ... காட்சி தரக் கூடியவையே. ஏனென்ருல், இந்த உலகமே ஒரு மாயம். இந்த மாயத்தை வெல்லுபவர்களால்தான் தெய்வீக உலகத்தைத் தெரிந்து, புரிந்து, விரும்பி, நம்பி அதற்குள் வாழவும் வளரவும் முடியும். எனவேதான்,

**“குருவாசக உறுதிமொழிகள் கருத்தையும் குழப்பும், கருவையும் கலக்கும், உரிய பெரிய உருவையும் உருவாக்கித் தரும்”**

என்று சித்தர்களின் நூல்கள் அடிக்கடி குறிக்கின்றன. இவற்றின் பொருளேத் தெரிந்து ஆராய்ந்து புரிந்து செயல்படுக.

3. **குருபாரம்பரியம்:** “காலங்கள் தோறும் தோன்றுகின்ற சித்தர்கள் விந்துவழி வாரிசுகளேயும், குருவழி வாரிசுகளேயும் உருவாக்குவது போக ஞானக் கருவழி வாரிசுகளாக சித்தரடியான்களே உருவாக்குவது மரபு. இதற்காக உலகியல் உரிமைகள், உறவுகள், உணர்வுகள், உட்கிடக்கைகள், ... முதலிய அனேத்தையுமே முழுமனதோடு குருவுக்குக் காணிக்கையாகக் கேட்கும் மரபுண்டு. இம்மரபு மாருமல் இம்மரபின் வழியாகவே தயாரிக்கப்பட்ட அடியான்களும், அடியாள்களும், அடியார்களும் கூட குருவை மாறியும் மீறியும், பகைத்தும் நகைத்தும், ஒதுங்கியும் பதுங்கியும், துரோகித்தும் விரோதித்தும், ... குருவை விட்டே விலகிச் சென்று விடுகிருர்கள். அதனுல் காலங்கள் தோறும் தோன்றும் சித்தர்கள் தங்களுடைய ஞானக் கருவழி வாரிசு, குருவழி வாரிசு, திருவழி வாரிசு முதலியவர்களே உருவாக்கும் பொழுது குருபாரம்பரிய மரபுப்படியும் குருவாசக உறுதிமொழிப்படியும்தான் தயாரிக்க வேண்டும்” என்று

மிகத் தெளிவாக கூறுகிறது. இதன்படியேதான் பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி, இராசிவட்ட நிறைவுடையார், இன்றைய குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் கருவூரார் அவர்கள் செயல்பட்டு வருகிறார் என்பதைப் புரிந்து கொள்ளுங்கள். இப்பேருண்மை தங்களுக்குப் புரிந்தால் வாங்கப்படும் உறுதிமொழிகளோ! காணிக்கைகளோ! எந்தவிதப் பேராசையாலும் அல்ல! அல்ல!! அல்ல!!! என்பது புரிந்திடும்.

4. பதினெண்சித்தர் பீடாதிபதிகள் அனைத்து வகைப்பட்ட வழிபடுநிலை பெற்றவர்களுக்கும், விண்வெளியிலுள்ள அனைத்து வகை தாத்தாக்களுக்கும் ஆத்தாக்களுக்கும், மண்ணுலகிலுள்ள அனைத்து வகைச் சித்தர்களுக்கும், அருளாளர்களுக்கும், அருளாளிகளுக்கும், மருளாளர்களுக்கும், மருளாளிகளுக்கும் உரிமை வாரிசுகளாக, பெருமைக்குரிய பதிலிகளாக செயல்பட வேண்டியவர்களே ஆவார்கள்.

எனவேதான் இன்றைய ஞாலகுரு சித்தர் கருவூரார் தாம் அனுப்புகின்ற ஆணைகளை 1. திருவாணை, 2. திருவுள ஒப்புதல் பெற்ற குருவாணை, 3. திருவுளச் சம்மதம் பெற்ற குருவாணை, 4. தாத்தாக்கள் ஆத்தாக்களின் ஆணை, 5. தாத்தாக்கள் ஆத்தாக்களின் திருவுள ஒப்புதல் பெற்ற குருவாணை, 6. தாத்தாக்கள் ஆத்தாக்களின் திருவுளச் சம்மதம் பெற்ற குருவாணை, 7. அருளாட்சித் தாக்கீது, 8. அருளுலக ஆணை, 9. அருளுலக ஒப்புதல் பெற்ற குருவாணை, 10. அருளுலகச் சம்மதம் பெற்ற குருவாணை, 11. குருவாணை, 12. குருவின் கருத்து விளக்கம், 13. குருவின் செயல் விளக்கம், 14. குருவாணை மடல், 15. குருவாணை முடங்கல், 16. குருவாணை ஓலை, 17. குருவாணை திருவோலை, 18. குருவாணை அஞ்சல், 19. திருமந்திற ஓலைநாயக அறிவிப்பு, 20. திருமந்திற ஓலைநாயக அருளாட்சித் தாக்கீது, 21. திருமந்திற ஓலைநாயகக் குருவாணை,

22. குருநிலை விளக்க மடல், 23. குருநிலை விளக்க முடங்கல், 24. குருநிலை விளக்க ஓலை, 25. குருநிலை விளக்கத் திருவோலை, 26. குருநிலை விளக்க அஞ்சல், 27. அருளாட்சி அறிக்கை, 28. அருளாட்சி அழைப்பு, 29. அருளாட்சி அறிவிப்பு, 30. சித்தர் நெறி விளக்கம், 31. சித்தர் நெறிச் சாரம், 32. நலம் நாடும் மடல், 33. நலம் நாடும் முடங்கல், 34. நலம் நாடும் ஓலை, 35. நலம் நாடும் திருவோலை, 36. நலம் நாடும் அஞ்சல், 37. செயல்நலம் ஊக்குவிப்பு மடல், 38. செயல்நலம் ஊக்குவிப்பு முடங்கல், 39. செயல்நலம் ஊக்குவிப்பு ஓலை, 40. செயல்நலம் ஊக்குவிப்பு திருவோலை, 41. செயல்நலம் ஊக்குவிப்பு அஞ்சல், 42. மாவீர பயிற்சி வளர்ச்சி பாராட்டு மடல், 43. மாவீர பயிற்சி வளர்ச்சி முடங்கல், 44. மாவீர பயிற்சி வளர்ச்சி ஓலை, 45. மாவீர பயிற்சி வளர்ச்சி திருவோலை, 46. மாவீர பயிற்சி வளர்ச்சி அஞ்சல், 47. கண்டிப்புத் திருத்தக் குருவாணை, 48. தற்காலிகச் செயல் தடை உத்தரவு, 49. பரிகாரக் குருவாணை, ... என்று பல தலைப்புக்களில் ஆணைகள் பிறப்பிக்கின்றார்.

அதாவது தான் வேறு, தலைவன் வேறு என்ற வேறுபாட்டுணர்வு இல்லாமல் செயல்பட்ட போதிலும் 'எல்லாமே தாத்தாக்கள் ஆத்தாக்கள் செயல். இனி தன்னால் ஆவது ஏதுமில்லை, ஆவதும் அவர்களாலே, போவதும் அவர்களாலே, ஏவுவதும் அவர்களே' என உணர்ந்து பணிவோடும், துணிவோடும், கனிவோடும் செயல்படுபவராக வாழ்பவரே இன்றைய ஞாலகுரு என்று கூறிக் கொள்ளுகின்றேன். இதனைப் பொறுப்போடு ஏற்று, பொறுமையோடு சிந்தித்துப் புரிந்து செயல்படுங்கள்.

ஏசுநாதரின் (13) பதின்மூன்று சீடர்களும் பொறுமையிழந்து அவரை உடனடியாக அருளாட்சி அமைக்கும் பணியில் ஈடுபடுமாறு வற்புறுத்தினார்கள். அப்பொழுது அவர், 'அடியார்களே! நான்

எதிர்பார்க்கின்ற அளவு என்னிடம் நம்பிக்கையும் விசுவாசமுமுள்ள அடியார்கள் இன்னும் எனக்குக் கிடைக்கவில்லை. அதுவரையிலும் நான் பொறுத்திருக்க வேண்டும். இல்லையேல் என் பணி முழுமை பெற இயலாது' என்று கூறினாராம். அதைக்கேட்ட அடியார்கள், 'நாங்கள் எங்கள் குடும்பத்தையும் உற்றார் உறவினர்களையும் துறந்து உங்கள் பின்னால் வந்து கொண்டிருக்கிறோம். எங்களை நீங்கள் நம்பவில்லையா?' என்று கேட்டார்கள். அதற்கு அவர் மெல்லிய புன்னகை ஒன்றையே பதிலாக அளித்தாராம்.

சில நாட்கள் கழித்து ஏசுநாதர் அனைவரோடும் கடலில் பயணம் செய்தாராம். அப்பொழுது அவர் தன்னுடைய அடியார்களைப் பார்த்து, 'என்மீது முழுமையான நம்பிக்கையும் விசுவாசமும் உடையவர்கள் ஆணையிட்டால் மலை கூடப் பின்னால் நகர்ந்து போகும்; காற்றுக் கூடக் கட்டுப்படும் என்பதை உணர்ந்து செயல்படுங்கள். நான் சிறிது நேரம் உறங்கி ஓய்வெடுத்துக் கொள்கிறேன்' என்று கூறிப் படகின் ஒரு பக்கத்தில் படுத்துத் தூங்கினாராம்.

சிறிது நேரத்திற்குள் கடல் கொந்தளித்து பெரிய பெரிய அலைகள் படகைத் தள்ளாடச் செய்தன. சூறாவளிக் காற்று படகையே கவிழ்த்து விட முயற்சி செய்தது. தியானத்தில் ஈடுபட்டிருந்த ஏசுநாதரின் அடியார்கள் அச்சத்தால் தியானத்தை விட்டு விட்டு அலறினார்கள், கதறினார்கள். கைகளைப் பிசைந்து கண்கலங்கினார்கள். ஆனால், கடலின் கொந்தளிப்பும், சூறாவளிக் காற்றின் வேகமும் குறைந்தபாடில்லை. உடனே, அந்த அடியார்கள் உறங்கிக் கொண்டிருந்த ஏசுநாதரைப் பலமாகத் தட்டி எழுப்பி, 'ஏசுவே நாங்களெல்லாம் சாகப் போகிறோம். எங்களைக் காப்பாற்றுங்கள். எங்களைக் காப்பாற்றாமல் நீங்கள் இப்படி உறங்கிக் கொண்டிருக்கலாமா? உடனே எழுந்திருங்கள், உடனே எழுந்திருங்கள்' என்று ஆவேசமாகக் கூக்குரலிட்டனர்.

ஏசுநாதர் கண்விழித்து எழுந்தார். புன்னகை உதிர்த்த படியே, ‘அடியார்களே! கடல் அலைகளின் கொந்தளிப்பை விட வேகமாக என்னைத் தட்டினீர்களே, சூறுவளிக் காற்றின் பேரிரைச்சலை விட பெரிதாகக் கூப்பாடு போட்டீர்களே, என்மீது உங்களுக்கு நம்பிக்கையும், விசுவாசமும் இருந்தால் இப்படிச் செய்திருப்பீர்களா? உங்களுடைய படகில் நானும்தானே இருக்கிறேன். என்னை விட்டு விட்டு நாங்கள் மட்டும் சாகப் போகிறோம் என்று கூக்குரல் கொடுக்கிறீர்களே. முன்பு நான் கூறியது போல் உங்களில் யாரும் என்னிடத்தில் நம்பிக்கையும், விசுவாசமும் இல்லை என்பதை மெய்ப்பித்து விட்டீர்களே!’ என்று கூறி புன்னகை பூத்தபடி தன்னுடைய கையைத் தூக்கி கடலைப் பார்த்து, ‘ஏ! சாத்தானே! அமைதியாக இரு!’ என்று ஆணையிட்டார். உடனே, காற்றும் கடலும் அடிபணிந்தன. அடியார்கள் நாணம் கொண்டு வெட்கித் தலை குனிந்தார்கள்.

ஆனால், ஏசுநாதர் அதற்கு மேல் அவர்களைக் கண்டிக்கவில்லை. அருளாட்சி அமைக்கும் பணியில் மிகுந்த நிதானமும், பொறுமையும், அமைதியும் கடைப்பிடித்தார். ஆனால், பொறுமையிழந்த அடியார் ஒருவர் அவரைக் காட்டிக் கொடுத்திட்டார். அதுகண்டு தேவகுமாரனை அவரே உலகியல்படி தனது முடிவை வரவேற்றிட்டார்.

இந்த நிலை சித்தர்களின் தாயகமான தமிழகத்தில் தாய் இனமான அல்லது நேரடி வாரிசான தமிழர்களில் யாருக்கும் வந்துவிடக் கூடாது என்று குரு பாரம்பரியம் மிகத் தெளிவாக குறிப்பிடுகின்றது. அதாவது, **குரு பாரம்பரியத்தில்தான் ஏசுநாதர் வரலாறு மிகத் தெளிவாகவும் முழுமையாகவும் கூறப்படுகின்றது.** ஏசுவை ஈசா, ஈசுவரன், ஈசன், தேவகுமாரன், சித்தர் குருவழி வாரிசு, ஞானசித்தர், நவநாத சித்தர், சீவன்முத்தர், ... என்று பல பெயர்ச்சொற்களால் குறிப்பது; தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய பதினோராவது பதினெண்சித்தர் பீடாதிபதி குருமகாசன்னிதானம் சித்தர்

காவிரியாற்றங்கரைக் கருவூரர் அவர்கள் ஏசுவிடம் எவ்வளவு அன்பும், பற்றும், பாசமும், மரியாதையும், பெருமிதமும் கொண்டிருந்தார் என்ற பேருண்மையை விளக்குகின்றது.

**“உலகம் முழுவதும் அருளாட்சி அமைக்க ‘அற்புதங்களை’, ‘மாயங்களை’, ‘வியப்புக்களை’, ‘இயற்கையிறந்த செயல்களை’, ‘அதிசயங்களை’, ... செய்வதன் மூலம் முயற்சித்த ஈசா மாண்டார், மீண்டார், அருளாளர்களை ஆண்டார்...”** என்ற குரு பாரம்பரிய வாசகம் அருளாட்சி அமைக்க முற்படுபவர்களுக்கு **ஒரு சிறந்த அறிவுரையாகவே** நிற்கின்றது. அதாவது, ‘எந்த ஒரு தனிமனிதனும், தன்னுடைய சித்து விளையாடல்களை மட்டும், *அருட்சித்திக் கொடைச் செயல்களை* மட்டும் நம்பி உலகியலில் பெரிய மாற்றங்களைச் செய்ய விரும்பினால்; எதிர்ப்பும், ஏமாற்றமும், ஏளனமும், ஏச்சும், பழியும், அழிவுமே அடைய நேரிடும்’ என்ற தத்துவ விளக்கமே குரு பாரம்பரியத்தால் வழங்கப் படுகிறது.

இந்த உலகிலேயே ‘குரு பாரம்பரியம்’ என்ற பெயரால் மத வரலாறும் (Religious History), ‘அரச பாரம்பரியம்’ என்ற பெயரால் அரசியல் வரலாறும் (Political History), ‘இலக்கிய பாரம்பரியம்’ என்ற பெயரால் இலக்கிய வரலாறும் (History of Language and Literature) மிகத் தெளிவான காலக் கணக்கீட்டு முறைப்படி (With a chronological apporoach) எழுதிக் கொடுத்திருப்பவர்கள் பதினெண்சித்தர்கள். ‘இந்த உலக வாழ்வை அல்லது மனித வாழ்வை அல்லது சமுதாய அமைப்பை நிர்ணயிப்பதும், நிர்ணயம் செய்வதும் 1. மதம், 2. அரசியல், 3. இலக்கியம் என்கின்ற முக்கோணக் கோட்டுக்குள் அடங்கிடும் முக்கோண பீடமேயாகும்’ என்று மிகத் தெளிவாக விளக்கி யிருக்கிறார்கள்.

இந்தத் தெளிவுமிக்க பதினெண்சித்தர்களின் நெடிய பாரம்பரியத்தின் வாரிசாக வந்திருப்பவரே தான் என்ற உணர்வில் செயல்படுபவரே

நமது குருதேவர். எனவேதான், அவர் தான் எழுதிய தன்னுடைய சொந்த வாழ்க்கைக் குறிப்பேடுகளை (The diary), அஞ்சல் தொகுதிகளை நமது தலைமைச் செயலகத்தில் ஒப்படைத்து விட்டார். யார் வேண்டுமானாலும் அவற்றைப் படித்துப் புரிந்து கொள்ளட்டும் என்ற துணிவோடு வாழ்ந்து வருகிறார். மேலும் அவர் தன்னுடைய வாழ்க்கையை தெய்வீக சோதனை (The Test of Divinity) என்று அறிவிப்பு செய்திருக்கிறார். இவற்றிற்கெல்லாம் மேலாக அவர் தன்னுடைய வாழ்க்கை வரலாறு தனிமனித வரலாறாகவோ, நாட்டின் வரலாறாகவோ, உலக வரலாறாகவோ அமையாமல் அது மானுட இனத்தின் முழுமையான வரலாறாக இருக்கும் (The Complete and Full History of the Mankind) என்று அறிவிப்பு செய்திருக்கிறார்.

இப்படி யெல்லாம் தன்னுடைய வாழ்க்கையை கண்காட்சியகமாக, பொருட்காட்சியகமாக, கலைக் கருவூலமாக, நூலகமாக, கடற்கரைச் சோலையாக, அரச வீதியாக, வெள்ளிடை மலையாக, உள்ளங்கை நெல்லிக்கனியாக ... உலகுக்கு உருவாக்கித் தந்திருக்கும் நமது குருதேவரை நேரில் சந்தித்தும், அவருடன் தங்கியிருந்தும், உளம் திறந்து சந்தேகங்களைப் பற்றிப் பேசி ஐயங்களைப் போக்கிக் கொள்ளாமல் சென்றிட்ட தங்களைப் பற்றி என்ன நினைப்பது? ........................... ................................

5. ‘தன்னையறிந்தால் தலைவனை அறியலாம், அல்லது தலைவனை யறிந்தால் தன்னை அறியலாம்’ என்று மிகத் தெளிவாகப் பதினெண்சித்தர்கள் ‘சித்தரடியான் நிலை விளக்கம்’ வழங்கியிருந்தும் கூட நீங்கள் உங்களை அறியத் தவறி விட்டீர்கள். தலைவனை அறியத் தவறி விட்டீர்கள். .................... .................. ........................... ........................... ...............................

‘குருவும் திருவும் இரு கண்ணெனக் கருதி வாழவேண்டிய நிலையே சித்தரடியான் நிலை.’

‘குருவே அனைத்துக்கும் கரு.’

‘குரு வேறு தான் வேறு அல்ல என உணரத் தான் குருவுக்கு தாயாக தாரமாக தானீன்ற மகளாக என்ற முப்பெரு நிலையில் இருப்பதே சித்தரடியான் நிலை.’

- என்ற குருபாரம்பரிய வாசகத்தை அன்பு கூர்ந்து நினைத்துச் சிந்தித்துத் தெளிவடைக. வருந்தற்க! என் மீது குறைபட வேண்டாம். இதிலுள்ள சொற்களும் கருத்துக்களும் குருதேவருடையது என்பதற்காக கீழே கையொப்பமிட்டுள்ளார். இந்த மூலம் வெ.செகதீசனுக்கு.

சோ.இரவீந்திரன்.

**அன்பு**

**குருமகாசன்னிதானம்,**

**ஞாலகுரு சித்தர் கருவூரர்.**

**4.5.83.**

**//உண்மை நகல்//**

**//மூல நகல்: கையெழுத்துப் பிறதியாக கிடைத்தது.//**

சென்னை,
7.5.83.

## நலம் பாராட்டுத் திருவோலை

# சித்தரடியான் நிலை விளக்கம்

7.5.83இல் குருதேவர் குருமகாசன்னிதானம் ஞாலகுரு சித்தர் கருவூரர், தாத்தாக்கள் ஆத்தாக்கள் திருவுள ஒப்புதலாலும் சோதனைகள் மூலம் விடுத்த அருளாணைகளாலும் அவசர அவசியமாக அருள்மிகு வீரமாகாளி சன்னிதானம் அவர்கள் சமூகத்துக்கு வரையும் 'நலம் பாராட்டுத் திருவோலை'. புரிக! செயல்படுக!

1. அனைத்தும் தாத்தாக்கள் ஆத்தாக்கள் செயலே!

"என் செயல் ஏதுமில்லை!",

"பருவத்திலே பயிர் செய்!, பட்டம் (பருவகாலம்) வரும்வரை காத்திருந்து பயிர் செய்தால் பழுதில்லை";

"அருளாட்சி முயற்சி அடியான்கள் மூலம்தான் அமைதல் வேண்டும்";

"முதலில் அடியான்களை அனைத்து விதப் பக்குவங்களையும் பெற்றவர்களாக்கிடு. சட்டி சுட்டது கை விட்டது என்று உன்னை விட்டு விலகும் அடியான்களை நம்பிச் செயல்பட்டிடாதே; இராவணன் தம்பி வீடணன் போல் விலகிச் செல்பவர்கள் விரோதிகளாக, துரோகிகளாக, அழிவு வினைஞர்களாக மாறிடாத நிலையே அருளாட்சி பக்குவ நிலை";

“பேரும் புகழும் பெருஞ்செல்வமும் ஈட்டிட ஆவலுற்று அணுகுபவர் அதிக காலம் அடியான்களாக இருக்கவே முடியாது”;

“தலைமையை, தலைமையின் பதிலிகளை, தலைமையின் ஆணைகளை, ... ஏற்றுக் கண் என இமை காப்பது போல் பணிந்து காப்பவரே அடியான்கள்”;

“தலைவனின் கால் செருப்பாக எதையும் மிதிக்க, மதிப்பிடப் பயன்படுத்தப் படுபவனே அடியான்”;

“தலைவனுக்காகத் தன் உடலில் வேல் பாய்ந்தாலும், சொல் பாய்ந்தாலும், தணல் புகுந்தாலும், கொலைக் கருவிகள் விளையாடினுலும், ... தலைவனை விட்டு விலகாத உறுதியும், உரமும், வீரமும், தீரமும், பற்றும், பாசமும், பிடிப்பும் உள்ளவனே அடியான்”;

“காக்கை உட்காரப் பனம்பழம் விழுந்த கதையாகத் தலைவன் மீது குறை கூறி விலகுபவன் கோழை மட்டுமல்ல; அருட்செல்வம் பெற முடியாத ஏழையாகவே வாழும் சோம்பேறி, முட்டாள்....”;

“அருளாட்சிக்கு அடிப்படை அவரவருக்குள் இருக்கின்ற இருளை அகற்றிக் கொண்டு தலைவனும் தானும் ஒன்றே என்று எப்போதும் வாழும் பக்குவம் பெற்ற அடியான்களை ஆயிரக்கணக்கில் உருவாக்குவதுதான்”;

“துள்ளுகிற மாடு பொதி சுமக்காது என்பது போல் படபடப்பாகப் பேசிக் காட்டாறு போல் திட்டமின்றி முரட்டுத் தனமாகச் செயல்படுபவர் அருளுலகில் தொடர்ந்து வாழவே மாட்டார்கள்! அருளைப் பெறவே மாட்டார்கள்”;

"தன்னை, தனது உணர்வு, அறிவு, ஆர்வம், மரியாதை, மதிப்பு, பெருமை, செல்வம், கல்வி, புகழ், உறவு, உரிமை, ... முதலிய அனைத்தையும் குருவுக்கே உண்மையில் காணிக்கையாக்கியவனே பக்குவம் பெற்ற சித்தரடியானாக நிலைத்து நிற்க முடியும்";

"அடியான்களை உருவாக்குவது அரிதினும் அரிது, பெரிதினும் பெரிது, ஆபத்திலும் ஆபத்து, அழிவிலும் அழிவு, நலிவிலும் நலிவு, ... என்பதை உணர்ந்தே நாயன்மார்களும், ஆழ்வார்களும், அடிகளார்களும், சித்தியாளர்களும், பீடாதிபதியைத் தவிர்த்த மற்ற சித்தர்களும் ... அடியான்களை உருவாக்குவதே இல்லை... அருளாட்சி முயற்சி செய்யும் பீடாதிபதிகளே துணிந்து அடியான், அடியாள், அடியார், ஆர்வலர், விருப்பாளர், ஏந்து நல்குவோர், ... என்று பலவகை நிலையினரையும், பத்தியால் சித்தி பெறுவோரையும் உருவாக்குவர். இவ்வியப்பு மிகு சாதனைகள் பதினெண்சித்தர் பீடாதிபதிகளுக்கே உரியவை; பதினெண்சித்தர் பீடாதிபதிகளே பரந்த கடலில் நீந்திக் கரை சேருவது போல் அடியான்களிடையே செயல்பட்டு செல்வர்";

"சித்தரடியான் நிலை விளக்கம் முழுமையாகக் கூறினால் பலரும் சிறந்த சித்தரடியானாக நடித்திடுவர் என்பதால் உரிய காலங்களில் உரிய அளவு மட்டுமே கூறுதல் வேண்டும் என்பதே தாத்தாக்கள் ஆத்தாக்கள் ஆணை"

*- சித்தர்களின் நூல்களிலிருந்து நினைவுக்கு வந்த வாசகங்களே இவை. (குருபாரம்பரியம், குருவாசகம், குருவாக்கு, திருவாசகம்,*

*திருவாக்கு, கருவாசகம், கருவாக்கு, குருமார் ஒழுக்கம், ... முதலிய பல நூல்கள்.)*

நண்ப! தங்களின் முயற்சிகள் அனைத்தையுமே பாராட்டுகிறேன்; வருந்த வேண்டாம். மதுரை வர (டிக்கட்) பயணச் சீட்டுகள் வாங்கி விட்டேன். உடல் முழுநலமாக இருந்தால்தான் வருவேன். இப்போதிலிருந்தே எனக்காகச் செய்யும் ஏற்பாடுகளையும், விளம்பரங்களையும் குறைத்து விடுங்கள். மதுரை அடியான்கள் என் மகன்கள் போன்று விளையாட்டுப் பிள்ளைகள். மன்னித்து விடுங்கள். பக்குவம் வரும்போது மீண்டும் நம்மிடம் வரட்டும். இதன் நகலை உடனே அனைவருக்கும் அனுப்புங்கள்.

**அன்பு**

**ஞாலகுரு சித்தர் கருவூரார்.**

**//உண்மை நகல்//**

**//மூல நகல்: கையெழுத்துப் பிறதியாகக் கிடைத்தது.//**

**"அருளுலகில் சமசுக்கிருதத்தைப் பயன்படுத்துவது பெரிய பாவம், கொடிய தீட்டு, நெடிய சாபம்"**

-- குருபாரம்பரிய வாசகம்.

**<u>விளக்கம்</u>:-** 'அருளுலகில்' என்றால் தனிமனித அன்றாட வழிபாடுகள், கோயில் வழிபாடுகள், கூட்டு வழிபாடுகள், கோயில் குடமுழுக்குப் பூசைகள், வீட்டில் செய்யப்படும் அமாவாசைக்கான முன்னோர் வழிபாடுகள், பிறப்பு - திருமணம் - இறப்பு, ... ஆகியவற்றிற்கான சடங்குகள், வீடு மற்றும் தொழில் செய்யும் இடங்களில் நடத்தப்படும் சிறப்புப் பூசைகள், ... ... போன்றவற்றைக் குறிக்கும்.

குருமகாசன்னிதானம் ஞாலகுரு சித்தர் கருவூறூர் 8.5.83இல் [G.G.H. Ward 43B Room No.16] சென்னை அரசினர் பொது மருத்துவ மனையிலிருந்து அனுப்பும் அஞ்சல் நகல்:

# “சித்தரடியான் நிலை விளக்கம் 2”

[7-5-83].

1. தாத்தாக்கள் ஆத்தாக்கள் அருளால் யாவும் நலம். வெற்றியே! உண்மையே!

2. 7.5.83 இரவு செய்த **சுடலைப் பூசைகள்** மாபெரும் வெற்றியைப் பெற்றன. எனவே, நமது அருளுலகச் சாதனைகளால் விரைவில் பொருளுலகத் தொல்லைகளை, இருள்களை, தேக்கங்களை, ... அகற்றுவோம்! வெற்றி பெறுவோம்!

3. எமக்கு அறுவை மருத்துவம் 11.5.83 புதன்காலை நிகழும். அதனால், 23.5.83 பயணம் உண்டா? இல்லையா? என்பது தாத்தாக்கள் ஆத்தாக்கள் செயலே! இருப்பினும் திருச்சி மலைக்கோட்டை விரைவு வண்டியில் 23.5.83க்கு E2-16139 குருதேவர் சித்தர் 45 வயது; E3-16140 சுப்பையா 40 வயது; E4-16141 சுப்பிரமணி 35 வயது என்று மூன்று பயணச் சீட்டுக்கள் வாங்கப்பட்டு விட்டன. திருச்சி வட்டாரத்தார் 24.5.83இல் திருச்சிப் புகைவண்டிச் சந்திப்பில் எம்மைக் காண வர அறிவிப்பும் அனுப்பப்பட்டு விட்டது. கவிக்குமார் 18.5.83இல் காரியேந்தல்பட்டி வருவார். எமது உடல்நிலைக்கு ஏற்பவே இரவீந்திரன் காரியேந்தல்பட்டி வருவார். எப்படியும் பால்குட விழாவுக்கு மூவர் சென்னையிலிருந்து வருவர். யாவும் வெற்றியாகிடும்.

4. **‘சித்தரடியான் நிலை விளக்கம் 3’** (9.5.83) என்ற அஞ்சல் வெட்டுடையார்காளி சன்னிதானம் இரா.சண்முகானந்தனுக்கு எழுதப்பட்டுத் தாயுமானவர் சன்னிதானம் சு.இராசுநாயுடு அவர்களுக்கு அனுப்பப்படுகிறது. நேரில் சென்று படிக்கக் கேட்டும்; நகலெடுத்தும்

பயன்பெறுக. [மதுரை வட்டாரத்தார்களுக்கு இது ஓர் அவசர அவசிய அஞ்சல்.]

5. இயக்கத்தை விட்டு விலகுபவர்களைப் பற்றி யாரும் விமர்சனம் செய்ய வேண்டாம். அவரவர் விருப்பப்படியே இயக்கத்தில் சேருகிறார்கள்; விலகுகிறார்கள். எனவே, இதற்கு யாருமோ! எந்தச் செயலுமோ! காரண காரியமாகாது.... **"... புரட்சி இயக்கம் வளரும்போது; 'உதிர்வதும்', 'விலகுவதும்', 'முறிவதும்', 'பட்டுப் போவதும்' ... இயல்பாகக் காட்டில் நிகழ்வது போல் நாட்டில் மனிதரிடையே கருத்துப் பயிரினங்களுக்கும் நிகழும்..."** - கருவாசகம்.

**நாளை நடப்பதை நினைத்து ஒன்றுபடுவோம்! ஒற்றுமையுடன் செயல்படுவோம்! முயல்வோம்! வெல்வோம்! 'அனைத்தும் தாத்தாக்கள் ஆத்தாக்கள் செயலே!'**

**நமது இந்து மறுமலர்ச்சி இயக்கம் பல நூறாயிரக் கணக்கான ஆண்டுகளுக்கு முன்; கடலுள் மறைந்த 'இளமுறியாக் கண்டம்'** [The Lost Lemuria = **குமரிக்கண்டம்] எனும் பெரிய நிலப் பரப்பில் பிறந்த இந்துமதத்தை உலகப் பொது மதமாகச் செயல் வடிவில் மாற்றுவதற்கே முயலுகிறது. இதன் மூலம்தான் உலகச் சமத்துவச் சகோதரத் தத்துவப் பொதுவுடைமைக் கூட்டுறவுச் சமுதாயம் அமைக்க முடியும். இந்தப் பரந்த நோக்கில் செயல்படும் நாம் விலகுபவர்களைப் பற்றிக் கவலைப்படாமல்; விவேகத்தோடும், வீரத்தோடும், உரத்தோடும், தீரமாக முன்னேறிச் செயல்பட்டுக் கொண்டே இருக்க வேண்டும்.**

ஓம் திருச்சிற்றம்பலம்.

அன்பு

**குருமகாசன்னிதானம்,**
**ஞாலகுரு சித்தர் கருவூரார்.**

**//உண்மை நகல்//**
**//மூலம்: குருதேவர் கையெழுத்தில் இருந்த நகலாகவே கிடைத்தது.//**

அனுப்புபவர்:

அருள்மிகு ஞாலகுரு ஞானகுரு குருமகாசன்னிதானம்,
அண்டபேரண்ட ஆதிசத்திகள் சன்னிதானம்,
சித்தர் கருவூரூர் அவர்கள்.

பெறுநர்:

அருள்மிகு தாயுமானவர் சன்னிதானம்,
சித்தரடியான் சு.இராசுநாயுடு,
130-A, மேலமாசி வீதி,
மதுரை-625001.

## செயல்விளக்கத் திருவோலை

# சித்தரடியான் நிலை விளக்கம் 3

**9-5-83.**

அருள்மிகு அருட்சேனைத் தளபதி வெட்டுடையார்காளி சன்னிதானம் சித்தரடியான் இரா.சண்முகானந்தன் அவர்கள் சமூகத்துக்குக் குருமகாசன்னிதானம் ஞாலகுரு சித்தர் கருவூரூர் அவசர அவசியங்களை முன்னிட்டு 9.5.83இல் விடுக்கும் **செயல்விளக்கத் திருவோலை.**

1. யாவும் தாத்தாக்கள் ஆத்தாக்கள் செயலே என்று எந்த முடிவையும், நினைவையும், பயனையும், நிலையையும் பற்றிக் கவலைப்படாமல் பணிவுடனும், துணிவுடனும் தொடர்ந்து அருளாட்சிப் பணிகளையும் முயற்சிகளையும் ஆற்றி வருகிறேன் நான். எனக்கு முன் பதினேரு பதினெண்சித்தர் பீடாதிபதிகள் ... தமிழர்களை ஒற்றுமைப்படுத்த முடியாமல், தமிழர்களின் உண்மையற்ற, திண்மையற்ற, ஒற்றுமைப் பண்பற்ற, ஒருமைப்படும் உணர்வற்ற, பொறுமையற்ற, பொறுப்பற்ற, தானென்ற ஆணவமும் அகம்பாவமும் நிறைந்த ...

போக்குகளால் மனம் உடைந்து தனிமைத் தவத்தில் ஆழ்ந்திட்டனர். பதினோராவது பதினெண்சித்தர் பீடாதிபதி குருமகாசன்னிதானம், சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரார் தஞ்சைப் பெரிய கோயிலின் நிலவறைக்குள் சென்றார்; அவர் மகன் கருவூர்த் தேவர் இமயமலைக்குச் சென்றார்; பேரன் திருமாளிகைத் தேவர் நிலவுக் கண்டம் சென்றார். ... ...

இனி நான் எனது தோல்விகளால் "..... துரோகிகளும், விரோதிகளும், தன்னலக்காரர்களும், அவசரக்காரர்களும், ஆத்திரக்காரர்களும், பொறுப்பற்றவர்களும், பொறுமையில்லாதவர்களும், பொறாமைக்காரர்களும், போலிகளும், கூலிகளும், காலிகளும், ... மிகுதியாக உடைய இந்த நாட்டில் செயல்படவே முடியாது...." என்று கூறி எங்காவது தனிமைத் தவத்தில் ஈடுபடுவேனோ என்று எண்ணவே தேவையில்லை. எனக்கு எதுவுமே தோல்வியாகத் தெரிவதில்லை. என்றால் பெரும்பாலானவர்களைப் பக்குவப்படுத்தி மாபெரும் அருட்புரட்சியைத் தமிழகம், தென்னிந்தியா, இந்தியா, உலகம், ... என்று படிப்படியாக நிகழ்த்திட முடியும்! முடியும்! முடியும்! எனவேதான், 'எல்லாம் தாத்தாக்கள் ஆத்தாக்கள் செயலே!' என்று செயல்படுகிறோம்.

மேலும் என் தந்தை ஒரு மாபெரும் தத்துவ மேதை, வரலாற்றுப் பேரறிஞர், புரட்சிச் சிங்கம், சிந்தனைச் சிற்பி, பகுத்தறிவுப் பகலவன், இலக்கியக் கடல், மார்க்சியத் தத்துவத்தின் தந்தை, செயல்வீரர், ... என்பதால் என்னை முறையாகவும், முழுமையாகவும் பிறவித் தலைவனாக வளர்த்திருக்கிறார். அவரது கனவுகளை நனவாக்கும் அறிவு, ஆற்றல், ஆர்வம், தீரம், வீரம், உரம், தரம், மறம், ... அனைத்தும் என்னிடம் ஊற்றெடுத்து ஆற்றுப் பெருக்காய் ஓடுவதை அநுபவப் பூர்வமாகக் கண்டு களித்து அவரே எம்மை வாழ்க! வெல்க! ... என்று வாழ்த்தி யிருக்கிறார். எனவே, யாம் செயலே வடிவாகவும், வாழ்வாகவுமே இருப்போம்! இருப்போம்! இருப்போம்!

2. ...................... ........................... ...........................

3. நீங்கள் தம்பியையோ, உறவினரையோ ... நம்மைப் பற்றித் தவறாக நினைக்கும் உணர்வை வளர விட்டிருக்கத் தேவையில்லை. ஏனெனில், கட்டாயமோ! வற்புறுத்தலோ! அச்சுறுத்தலோ! இச்சகம் பேசலோ! ... சித்தர் நெறியில் இல்லை. **விரும்புகிறவர் விரும்புகிற தெய்வங்களை விரும்புகிற முறையில் வழிபடலாம்; வழிபாடே செய்யாமலும் இருக்கலாம். = கல்லடி நாயனாரும், சொல்லடி நாயனாரும் சித்தர் நெறிக்கு உரியவரே....**

4. நண்ப! குருபாரம்பரிய மரபுப்படி உறுதி மொழிகளும், காணிக்கைகளும் வாங்காமல் பலரை நமது இயக்கத்தில் சேர்ப்பதாலேயே குழப்பங்கள் ....

**"நான் எனது உயிர், ஆவி, ஆன்மா, சொந்தம், சொத்து, உரிமை, உறவு, உணர்வு, ... முதலிய அனைத்தையும் அறிவு விழித்த நிலையிலே குருவுக்குக் காணிக்கையாக்குகிறேன். அவர் எதை வேண்டுமானாலும், எப்போது வேண்டுமானாலும், எப்படி வேண்டுமானாலும் பயன்படுத்திக் கொள்ளலாம். இது முக்காலும் சத்தியம்! ..."** என்று ஒவ்வொரு சித்தரடியானும் உறுதிமொழி கூறியே நமது இயக்கத்தில் சேருகின்றனர். குருவாசக உறுதிமொழிகள் பச்சையாக, கொச்சையாக, கடுமையாக இருப்பதால்தான் அவற்றிலிருந்து எப்போதாவது ஒருசில வாசகங்களைப் பயன்படுத்திக் கூட இ.ம.இ. உறுப்பினரிடம் உறுதிமொழிகள் வாங்கப் படுகின்றன...

"..... நான் குருவுக்குத் தாயாகவும், தாரமாகவும், தாளீன்ற மகளாகவும் என்றென்றும் இருப்பேன்!"

"நான் குருவிடம் நன்றியுள்ள நாயாகவும், அவரது கால் செருப்பாகவும் இருந்து அவருடைய கோபதாபங்களையும், கண்டிப்புக்களையும், தண்டனைகளையும் ஏற்றே வாழ்வேன்!"

“நான் எத்தகைய சோதனை வந்தாலும் குருவை மறுக்கவோ! வெறுக்கவோ! பகைக்கவோ! எதிர்க்கவோ! மறக்கவோ! ... மாட்டேன்!”

“நான், குருவே என்னை விலக்கினாலும், அவரை விட்டு விலக மாட்டேன். அவர் மீது பழியோ, இழிவோ கூற மாட்டேன். என் முன்னால் யாரும் குருவைப் பழிக்கவோ! அழிக்கவோ! இழிக்கவோ! அனுமதிக்க மாட்டேன்!”

“நான் ‘குருவே எல்லாம்!’; ‘குருவே அனைத்துக்கும் கரு’; ‘குருவும் திருவும் ஒன்று!’; ‘குருவழிக் காணலே பத்திக்கும் சத்திக்கும் சித்திக்கும் முத்திக்கும் உரிய செழிப்பை நல்கும்!’ ..... என்ற பேருண்மைகளைப் புரிந்து, தெளிந்து, உணர்ந்து, ஒப்புக் கொண்டே வாழுகிறேன்; என்றென்றும் குருவுக்காகவே வாழ்வேன்!”

“நான் குருவை, குருவின் வாரிசுகளை, குருவின் பதிலிகளை, குருவின் ஆணைகளை..... என்றென்றும் மதித்து உயிராகப் போற்றி வாழ்வேன்!”

“குரு என்னை விற்கவோ, ஒற்றி வைக்கவோ, பலியாகக் கொடுக்கவோ, ஏசவோ, பேசவோ, கண்டிக்கவோ, தண்டிக்கவோ..... முழு உரிமையுண்டு என்ற உண்மைகளை உணர்ந்தே நான் என்னைக் குருவுக்கு காணிக்கையாக்குகின்றேன்!”

“அருளுலக உண்மைகளை அநுபவப் பூர்வமாக வழங்கும் குருவுக்கு என்னை அறிவுப் பூர்வமாகக் காணிக்கையாக்கும் நான்; தன்மான உணர்வு, அகம்பாவ ஆணவ உணர்வு, பேராசை, பற்று, பாசம், உறவு, உரிமை... முதலிய உணர்வுகள்..... ஆகியவற்றால் எப்பிறப்பிலும் குருவை விட்டுப் பிரிய மாட்டேன், பிரிய மாட்டேன், பிரிய மாட்டேன்!”

"நான் குருவைப் புரிந்து விரும்பி முழுமையாக ஏற்றுக் கொண்டு என்னைக் காணிக்கையாக்குகிறேன். அதனால் ஒளிவு மறைவின்றி அனைத்தையும் குருவிடம் கூறி அவரது கருத்தை அறிந்தே திருத்தமுடன் பொருத்தமாகச் செயல்படுவேன். இது முக்காலும் சத்தியம்! சத்தியம்! சத்தியம்!"

... ... ... என்றிப்படிப் பல குருவாசக உறுதிமொழிகள் இருக்கின்றன. ஆனால், இன்றைய உலகியலுக்கேற்பவே நான் மேற்படிக் கடுமையான வாசகங்களை உறுதிமொழியாகப் பயன்படுத்துவதில்லை. ஆனால், இப்போது தமிழனுக்குத் தன் இனத்தவன் தலைவனாக, வழியாக, விழியாக, வழிகாட்டியாக .... வரவே முடியாத இழிநிலை ஏன் தொடருகின்றது என்பதற்கு விளக்கங்கள் கிடைக்கின்றன. நல்லது .... யார் நம்மை விட்டுப் போவதென்றாலும் போகட்டும் ..... பிறகு எப்போது வேண்டுமானாலும் அவர்கள் நம்மிடம் வரட்டும். எல்லாம் தாத்தாக்கள் ஆத்தாக்கள் செயலே.

5. நமது இயக்க மரபுப்படி, குருவின் எல்லை மீறியோ, மாறியோ! தவறியோ! ... செயல்படுபவர்களைப் பற்றி யார் வேண்டுமானாலும், எவரிடம் வேண்டுமானாலும், எப்படி வேண்டுமானாலும் விமர்சித்துப் பேசலாம். விமர்சித்துக் கட்டுரைகள் எழுதிப் பலருக்கும் நகல்கள் அனுப்பலாம்.

6. நமது இயக்க மரபுப்படி, யாரையும் உடனுக்குடன் அழைத்து நேரில் கண்டிப்பது குருவுக்கு உரியதல்ல. குருவால் கூறப்பட்டும், ஆணையிடப்பட்டும்; பிறர் வாயிலாகத்தான் விமர்சிக்கும் கருத்துக்கள் பரவிடும்.

7. பிறரின் தவறுகள் எல்லை மீறி இயக்கத்தைப் பாதிக்கும் என்ற எல்லையை அடையும்போதுதான் குருவாணைகள் திருமந்திர ஓலைநாயகம் நெ.சேவுகன் அவர்களின் தாக்கீதுகள், ஆணைகள் வழங்கப்பட்டுத் தற்காலிகச் செயல் தடை, தற்காலிக ஓய்வு,

குறிப்பிட்ட வட்டாரத்தில் மட்டும் செயல்படல், குறிப்பிட்ட வட்டாரத்தில் மட்டும் செயல்படக் கூடாது... என்ற கண்டிப்புத் தண்டனைகள் பிறக்கும். இவை பிறரைத் திருத்துவதற்காகத்தானே தவிர, யாரையும் முழுமையாக நம்மை விட்டு விலக்குவதற்காக அல்ல! அல்ல! அல்ல! அல்லவே அல்ல!

நாம் **ஓர் விடுதலை இயக்கம் = புரட்சி இயக்கம் = மறுமலர்ச்சி இயக்கம் = அருளியக்கம் = பண்பாட்டு (இயக்கம்)ப் புரட்சி இயக்கம்.** எனவே, நமக்குள் ஒழுங்கும், கட்டுப்பாடும், கண்டிப்பும் ... மிகமிக அவசியம்! அவசியம்! அவசியம்! இதற்காக ஒருவரைப் பற்றிய விமர்சனக் கருத்துக்கள் கட்டாயமாகப் பலருக்கும் அஞ்சல் மூலமும், உரையாடல் மூலமும் அறிவிக்கப் பட்டேயாக வேண்டும். அப்பொழுதுதான் **தவறு செய்தவர்கள் திருந்தவும், புதியவர்கள் தவறு செய்யாமலிருக்கவும், போலிநிலைகளும், காலிநிலைகளும், கூலிநிலைகளும், வேலிநிலைகளும் ... நமது இயக்கத்தில் என்றுமே வலிமை அடையாமலிருக்கவும் செய்ய முடியும்! முடியும்! முடியும்!** இவற்றைப் பொறுப்போடும், பொறுமையோடும் பலமுறை படித்துத் தெரிந்து, அறிந்து, ஆராய்ந்து, புரிந்து, தெளிந்து, உணர்ந்து, நம்பி ஒப்புக் கொண்டு செயலில் ஏற்று வாழ்ந்திடுக! வாழ்ந்திடுக! வாழ்ந்திடுக!

8. அன்பு கூர்ந்து யாருடைய முடிவையும் மாற்றிட முயற்சி செய்யாதீர்கள். அவரவர் முடிவுக்கு அவரவரே பொறுப்பு. பலகோடி மக்களின் விடிவுக்காக உழைக்கும் நாம் யாருடைய முடிவைப் பற்றியும் கவலைப்படக் கூடாது. எல்லாம் தாத்தாக்கள் ஆத்தாக்கள் செயலே. சிறுபிள்ளைகள் மணல் வீடு கட்டி விளையாடுவது போன்றதே மனித வாழ்க்கை என்கிற சித்தாந்தம் நமக்கு அனைத்தையுமே சிரிப்போடு விளையாட்டாக ஏற்கும் பக்குவத்தைத்தான் நல்க வேண்டும்! நல்க வேண்டும்! நல்க வேண்டும்!

9. நான் தற்போது மதுரை வருகின்ற நிலையில் இல்லை. எனவே, எனக்காக மதுரையில் எந்த ஏற்பாட்டையும் செய்ய வேண்டாம். மேலும், 11-5-83இல் எனக்கு அறுவை மருத்துவம் என்பதால் என்னால் 23-5-83 காரியேந்தல்பட்டி வர முடியுமா? என்பதே சந்தேகம். இருந்தாலும் பயணச் சீட்டுக்கள் 23-5-83 திருச்சி மலைக்கோட்டை விரைவு வண்டிக்கு E2=16139 குருதேவர் சித்தர் - 45 வயது; E3=16140 சுப்பையா - 40 வயது; E4 = 16141 சுப்பிரமணி - 35 வயது என்று வாங்கப்பட்டு விட்டன. 24-5-83 காலை திருச்சியில் என்னைச் சந்திக்க வருமாறு அறிவிப்புகளும் உரிய வட்டாரங்களுக்கு அனுப்பப்பட்டு விட்டன. இனி எல்லாம் தாத்தாக்கள் ஆத்தாக்கள் செயலே. 28-5-83இல் இரவு மலைக்கோட்டை வண்டி திருச்சியிலிருந்து புறப்படுவதற்கு இதேபோல் மூன்று பயணச் சீட்டுக்கள் வாங்கும் ஏற்பாடு இராசுநாயுடுவிடம் கூறி உடனே செய்யுங்கள். அவசரம். அவசியம். பொறுப்பு உங்களுடையதே. இதற்கு முன்பணம் தேவையென்றாலும் உடனே எழுதினால் அனுப்பப்படும்.

10. **‘சித்தரடியானாக இருப்பவன் குருவும் தானும் இருக்கின்ற இடம், சூழல், காலம், நேரம், உணர்வுநிலை, கருத்துநிலை, செயல்நிலை, ... முதலியவைகளுக்கேற்பவே அவ்வப்போது தேவையான அருட்செல்வங்களை, அறிவுரைகளை, சந்தேக நீக்கங்களை, ஐய விளக்கங்களைக் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும். இல்லாவிட்டால், அவன் தனது நிலையை இழப்பான்!’**

- குருபாரம்பரிய வாசகம்.

இந்த வாசகத்தைக் குறிப்பதோடு இந்த அஞ்சலை நிறைவு செய்கிறேன். விரைவில் சண்முகானந்தன் சென்னை திரும்ப நேரிடலாம். அதற்குள் மதுரை வட்டாரப் பணிகள் அனைத்தையும் முடித்துக்

கொண்டு தயார் நிலைக்கு வருதல் நலம். இன்று 7-5-83 இரவு நடந்த பூசைகள் முழு வெற்றியே.

11. உயர்திரு இராசுநாயுடு அவர்கள் இந்த அஞ்சலை அனைவருக்கும் படித்துக் காட்டிவிட்டு தமது கோப்பில் இதனைப் பாதுகாக்க வேண்டும். இதற்குச் சண்முகானந்தனும், இராசுநாயுடுவும் பல நகல்கள் எழுதிச் சென்னைக்கு அனுப்புவதோடு மதுரை அடியான்களுக்கும், காரியேந்தல்பட்டி அடியான்களுக்கும் உடனே அவசர அவசியமாக விரைவில் நகல்கள் வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

12. யாம் பால்குட விழாவுக்கு வருவதும் வராததும் தாத்தாக்கள் ஆத்தாக்கள் செயலே. இப்போது மதுரை வரவில்லை. மீண்டும் ஒரு முறை மதுரை வருவோம். கவலை வேண்டாம். 26-6-83 முடிய விடுமுறை இருக்கிறது. உடனே பதிலனுப்பவும். உங்களிருவரின் அஞ்சல்களும், வெ.செகதீசன் அஞ்சல்களும் கிடைத்தன.

ஓம் திருச்சிற்றம்பலம் ஓம்

**அன்பு**

**ஞாலகுரு சித்தர் கருவூரார்,**

**8-5-83.**

**//உண்மை நகல்//**

**// மூல நகல்: அருள்மிகு தாயுமானவர் சன்னிதானம் சித்தரடியான் சு.இராசுநாயுடு அவர்களால் எழுதப்பட்டு இருந்தது. //**

அரசினர் பொது மருத்துவமனை,
அறை எண் 41-A2,
சென்னை-3.
23-5-83.

# சித்தரடியான் நிலை விளக்கம் 4

1. இந்து மறுமலர்ச்சி இயக்க உறுப்பினர்களுக்கும், ஆர்வலர்களுக்கும், ஆதரவாளர்களுக்கும், விருப்பாளர்களுக்கும், நம்பிக்கையாளர்களுக்கும், அருட்பணி விரிவாக்கச் சேர மண்டல நாயகம் சித்தரடியான் இரா.செ.வேங்கட்டரமணன் B.E., விடுத்துக் கொள்ளும் கொள்கை, குறிக்கோள், செயல்நிலை... தத்துவ விளக்க அறிவிப்பு அஞ்சல்.

2. பேரன்புடையீர்! பேரார்வமிக்க அருட்பணி விரிவாக்கத் திட்டச் செயல்வீரர்களே! உங்கள் அனைவருக்கும் முதற்கண் எனது பணிவான வணக்கத்தையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கின்றேன். கடந்த சில திங்களாக நடந்து வரும் மண்ணுக்கும் விண்ணுக்கும் மூண்டுவிட்ட மாபெரும் போரின் காரணமாக நமது இயக்கத்தைச் சார்ந்தவர்களுக்கிடையிலும் பலவிதக் கலக்கங்கள், கவலைகள், குழப்பங்கள், குறைகள், தயக்கங்கள், தளர்ச்சிகள், மயக்கங்கள், மாறுபாடுகள், விரிசல்கள், விலகல்கள், ... முதலியவை தொடர்ந்து நிகழ்ந்து வருகின்றன. இவற்றின் காரணமாக நமது குருதேவர் குருமகாசன்னிதானம், ஞாலகுரு, ‘சித்தர் கருவூரார்’ அவர்கள் “சித்தரடியான் நிலை விளக்கம்” என்ற தலைப்பில் மூன்று கட்டுரைகள் வழங்கியிருக்கிறார். நான் நேரில் மூன்று நாட்கள் அவருடன் கலந்துரையாடிய காரணத்தால் இந்த **‘சித்தரடியான் நிலை விளக்கம் 4’** என்ற அஞ்சல் கட்டுரையை எழுத நேரிட்டுள்ளது. எனவே, இது, குருவுளக் கருத்துக்களை திருவுள ஒப்புதலோடு சித்தரடியான் என்ற நிலையில் அடியவன் விடுக்கின்றேன் என்றுணர்ந்து பொறுமையோடும்,

பொறுப்போடும், நிதானத்தோடும், நடுநிலையில் நின்று இதனைப் படித்துப் புரியுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

3. நமது இயக்கத்தின் ஆணிவேராக இருக்கும் செயல்திட்டம் 'தனிமனிதர் விமர்சிக்கப் படுதல்' என்பதே! அதாவது, நமது இயக்கத்துக்குள் எந்தத் தனிமனிதரையும் யார் வேண்டுமானாலும் திறனாய்வு செய்து அக்கட்டுரையை அனைவருக்கும் அனுப்பி விடலாம். [நகல்களை குருதேவர், வீரமாகாளி சன்னிதானம், யாரை விமர்சிக்கின்றார்களோ அவர் ... ஆகிய மூவருக்கும் அவசியம் அனுப்ப வேண்டும்]. இது பொறாமை, கோள் சொல்லல், பிறர் பழி கூறல், காலை வாரி விடுதல், ... முதலிய இழிபண்புகளாகக் கருதப்பட மாட்டாது. ஏனெனில், நமது இயக்கம் முழுக்க முழுக்க சமுதாய மாற்றத்தைச் செய்யப் போகின்ற ஒரு பண்பாட்டுப் புரட்சி இயக்கம் (A Cultural Revolutionary Organization). அதனால், நாம் சிலராக இருந்தாலும் சிறந்தவர்களாக, செயல்திறம் மிக்கவர்களாக, செயல்மறம் மிக்க சிங்கங்களாக ஒரே தலைமையின் கீழ் இயங்கும் ஒற்றுமையும், ஒழுங்கும், கட்டுப்பாடும் உள்ளவர்களாக ... தயாராக வேண்டும்! தயாராக வேண்டும்!! தயாராக வேண்டும்!!!

இதற்காகத்தான் இயக்கம் வளருகின்ற நிலையில் நமது தத்துவ அடிப்படையில் அல்லது நமது கொள்கை குறிக்கோள் அடிப்படையில் நாட்டமுடையவர்கள் அல்லது நம்பிக்கை உடையவர்கள் யார் வந்தாலும் அவர்களை உடனுக்குடன் நமது இயக்கத்தில் சேர்த்துக் கொள்கிறோம். இதனால் தரமற்றோர், உரமற்றோர், வீரமற்றோர், குறுகிய நோக்குடையோர், வெறி உணர்வு மிக்கோர், பேராசைக் காரர், சிறுபிள்ளைகள், கோழைகள், பல்வேறு வகையான பலவீனங்களை உடையோர், ... முதலியோர் நமது இயக்கத்தில் கணிசமான அளவு இருக்கின்றனர். இது, நமது குருதேவருக்கும் நன்கு தெரியும்.

இருந்த போதிலும் யார் எப்போது வேண்டுமானாலும் நம்மை விட்டு விலகவோ, ஒதுங்கவோ, பதுங்கவோ ... நேரிட்ட போதிலும்

அவர்கள், **“தமிழ் மொழி, தமிழ் இனம், தமிழ் நாடு என்ற முக்கோண நாற்றங்காலில் பயிராகி வளர்ச்சி பெற்றவைதான் உலகப் பண்பாடுகள், நாகரீகங்கள், மற்ற சமய சமுதாய அரசியல் கலை இலக்கியக் கூறுபாடுகளும் ஆகும்”** என்ற பேருண்மையினை என்றென்றுமே மறக்கவோ, அன்றி துறக்கவோ, அன்றி மறுக்கவோ, அன்றி வெறுக்கவோ! ... முடியாதவர்களாகத்தான் இருப்பார்கள். எனவே, இவர்கள் சமுதாய நலவிரோதிகளையும், துரோகிகளையும் ஒழிக்கும் முயற்சியில் நமக்கு ஆதரவு நல்காவிட்டாலும், எதிர்ப்பை நல்க முடியாதவர்களாகவே இருப்பார்கள். இப்பேருண்மையே இந்த **சித்தரடியான் நிலை விளக்கம் நான்கு** என்ற கட்டுரையின் உயிர்நாடி. எனவே, யாரையும் புண்படுத்த இது எழுதப்பட வில்லை. உணர்க! உணர்த்துக! “அறிவால் அருளுலகை தெரிய, புரிய, உணர முடியும்! முடியும்!! முடியும்!!!” என்ற சித்தர் நெறிக்குச் சான்றுகளே நமது எழுத்துக் குவியல்கள்.

4. நமது குருதேவர் இந்த மண்ணுலகம் தோன்றுவதற்கு முன்பே விண்வெளியில் உள்ள உலகங்களில் மிகமிகத் தொன்மையான காலத்திலிருந்து அருளாட்சி நிகழ்த்தி வரும் பதினெண்சித்தர்களின் விந்துவழி வாரிசாகத் தோன்றியிருப்பவர். எனவே, அவர் பதினெண்சித்தர்களின் கனவுகள் அனைத்தையும் நனவாக்கும் முயற்சியில் உரிமையோடும், உண்மையோடும் ஈடுபட்டிருப்பவர் என்பதனை நம்மவர்கள் அனைவரும் உணர்ந்து கொள்ள வேண்டும். இன்றைய நடைமுறையிலும், பிற்காலச் சோழப் பேரரசுக்குப் பிறகு இன்று வரை உள்ள பரந்த இடைவெளியிலும் தமிழுக்காக, தமிழினத்துக்காக, தமிழ்நாட்டிற்காக, தமிழர் தத்துவத்திற்காக உண்மையோடு உழைக்கப் புறப்பட்டிருப்பவர்கள் மிகமிகச் சிலரே. இந்தச் சிலரிலும் போதிய அளவு தமிழ்ச் சமுதாய, சமய, அரசியல், கலை, இலக்கிய, தத்துவ ... வரலாற்றறிவு இன்மையாலும், தளர்ச்சியின்றி முயற்சி செய்யும் வளர்ச்சியுறு உணர்ச்சிமிகு பயிற்சிகள் இல்லாததாலும், சூழ்ச்சித் திறமிக்க தமிழினப் பகைவர்களை வீழ்த்தும் தரமும்,

திறமும், தீரமும், வீரமும், நுட்பமும், திட்பமும் போதிய அளவு இல்லாமையாலும், மொழி அறிவில் போதிய செழுமை இல்லாமையாலும் வெற்றி பெற்றவர்கள் சிலரே.

அதாவது, தலைமைப் பண்பும், தமிழ்மொழிப் புலமையும், மக்களை ஒன்று திரட்டும் அறிவும், ஆற்றலும், பகைவர்களைத் தொடர்ந்து போரிட்டு வெல்லும் உரமும், உறுதியும் ... இல்லாமையால் தமிழ்நாட்டில் உண்மையான "தமிழ் வளவளர்ச்சிப் பணிகள்", "தமிழ் அரியணையில் அமரும் ஆளுமைப் பணிகள்", "தமிழ் இனப்பற்றும், மொழிப்பற்றும், நாட்டுப்பற்றும் பெற்று ஒன்றுபட்டு ஒற்றுமையோடு செயல்படும் பணிகள்"... முதலிய பணிகள் நன்கு திட்டமிடப்பட்டு முறையாக அறிவிக்கப்பட்டு முழுமையாகச் செயல்படுத்தப் படவே இல்லை! இல்லை!! இல்லை!!! இல்லவே இல்லை! இம்மாபெரும் பேருண்மையினைத் தெரியாதவர்களும் புரியாதவர்களுமே தமிழ் உரிமையையும், இன உரிமையையும், நாட்டு உரிமையையும் காத்திடக் கச்சை கட்டிக்கொண்டு புறப்பட்டு விட்டார்கள். அதன் விளைவு பொதுத் தொண்டின் பெயரால் புதிய புதிய பணக்காரர்கள் பிறந்ததுதான்.

இப்படி நான் கூறுவது பொறாமையாலோ! ஆத்திரத்தாலோ! அவசரத்தாலோ! அல்ல! இந்த நூற்றாண்டில் "**தமிழ் வாழ்க**!" என்று கூறியவர்கள் எல்லாம் நிறைய பொருளும், புகழும், அதிகாரமும், பதவியும் சம்பாதித்தவர்களாக இருப்பதைக் கொண்டு யாம் கூறிய கருத்தின் உண்மையை உணரலாம். ஏனெனில், இந்த நூற்றாண்டில் பெரும்பாலும் பாரம்பரியமோ! பண்பாடோ! முறையான பயிற்சியோ! முழுமையான கல்வித் தேர்ச்சியோ! உண்மையான பொதுநல ஆர்வமோ! தன்னலமற்ற தொண்டு உள்ளமோ! ... இல்லாதவர்கள்தான் தலைமை ஏற்கும் வாய்ப்பு வசதிகளைத் தொடர்ந்து பெற்று வருகிறார்கள். இதனால்தான், தமிழின விழிச்சியும், எழுச்சியும், கிளர்ச்சியும், வளர்ச்சியும், புரட்சியும், மறுமலர்ச்சியும், செழுச்சியும், உரிமை மீட்சியும், பெருமை ஆட்சியும் ... கானல் நீராக!

பழங்கதையாக! நம்பமுடியாத காட்டுமிராண்டிக் கற்பனையாக! பகல் கனவாக! ... இருந்து வருகின்றன! இருந்து வருகின்றன!! இருந்து வருகின்றன!!!

இம்மாபெரும் குறைபாடுகளை ஈடுசெய்வதென்றால் <u>**"மதவழிப் புரட்சி" ஒன்றால்தான் முடியும்! முடியும்!! முடியும்!!!**</u> என்ற பேருண்மையினை உணர்ந்து; நமது குருதேவரின் தந்தை காடுகளிலும், மலைமுகடுகளிலும், சுடுகாடுகளிலும், இடுகாடுகளிலும், புதைகாடுகளிலும், ஆற்றிடைக் குறைத் தீவுகளிலும், கடலிடைத் தீவுகளிலும் தனிமைத் தவம் மேற்கொண்டு அலைந்து திரிந்து கொண்டிருந்த நமது குருதேவரைத் தமிழ்நாட்டின் எல்லைக்குள் கொண்டு வந்து; நாட்டு நடப்புகளில் நாட்டம் கொள்ளச் செய்தார். இருந்தும், நமது குருதேவர் தொடர்ந்து இலைமறைகாயாகவே செயல்பட்டு வருகின்றார். ஆனாலும், நாட்டு நடப்புகளில் உள்ள நட்டங்களை ஈடுசெய்ய அருளாட்சி அமைக்கும் பணியில் ஈடுபட்டிட எண்ணற்ற வகைவகையான அருளாளர்களை, அருளாளிகளை, அருளாடு நாயகங்களை, மருளாளர்களை, மருளாளிகளை, மருளாடு நாயகங்களை, திருவோலக்க நாயகங்களை, கருவோலக்க நாயகங்களை, குருவோலக்க நாயகங்களை ... எண்ணற்று உருவாக்கிக் கொண்டே இருக்கிறார். இவர்களே பொதுமக்களுக்கு அருளை அநுபவப் பொருளாக வழங்கி அவர்களுக்குள் இருக்கும் இருளையும், அவர்களுக்கு வெளியே இருக்கும் இன்னல்களையும் அகற்றுவதன் மூலம் அருட்சேனையைத் திரட்டுகிறார்! திரட்டுகிறார்!! திரட்டுகிறார்!!! இதனை உணர வேண்டியதே சித்தரடியான் நிலையாகும்.

5. நண்பர்களே! நமது குருதேவரின் முயற்சிகளுக்கு தோல்வி ஏற்பட்டு விட்டது போல் நம்மிடையில் சிலர் விலகியும், ஒதுங்கியும், நீங்கியும், செயல்படாத நிலைகள் பிறந்திருக்கின்றன. இதைப்பற்றி நம்மவர்கள் முழுமையாகச் சிந்தித்து விமர்சனங்களைக் கட்டுரையாக எழுதி குருதேவருக்கு அனுப்ப வேண்டும். என்னைப் பொறுத்தவரை நமது குருதேவர் யார் தம்மிடம் வந்தாலும் அவர்களை உடனுக்குடன்

ஏற்றுக்கொண்டு அருளுலக ஒப்புதலைப் பெற்று அவசரமாக அருட்பட்டங்களை வழங்குகிறார். இது, அவருடைய கொடை உள்ளத்தையும், பொதுவுடமைத் தத்துவச் செயல்பாட்டையும் விளக்குவதாகும். ஆனால், தரமோ, திறமோ, உரமோ, உண்மையோ இல்லாதவர்கள் அருள் உலகில் நிலைத்து நிற்க முடியாமல் தாங்களாகவே குருதேவரை விட்டு விலகியும், ஒதுங்கியும், நீங்கியும் செயல்படுகிறார்கள் என்பதே முடிவான விமர்சனம். நம்மை விட்டு விலகியவர்களுக்குத்தான் நட்டமே ஒழிய, நமக்கு நட்டம் இல்லை! இல்லை!! இல்லை!!! இல்லவே இல்லை!!!!

6. நம்மை விட்டு விலகியவர்களில் சிலர் 'குருதேவர் ஏன் முன்பின் யோசியாமல் அவரே அச்சப்படக் கூடிய அண்டபேரண்ட ஆதிசத்திகள் பூசையினைச் செய்தார்? இப்பூசையைச் செய்த அவரல்லவா நேரிடையாகப் போரில் இறங்க வேண்டும்? ஆனால், அவர் அப்பாவியான அடியான்களைப் பயன்படுத்தி பலியாக்குகிறாரே, இது நியாயமா? அவருக்காக நாம் எல்லோரும் இரத்தம் கக்கிச் சாக வேண்டியதுதான். இனிமேலும், அவர் பின்னால் செல்வது தற்கொலைக்குச் சமமாகும்...' என்று பலவகைப் பட்ட விமர்சனங்களை நல்கியிருக்கிறார்கள்.

இதற்கென்று எந்தவித தனியான பதிலும் நான் எழுதத் தேவையில்லை. ஏனெனில், அருட்பட்டம் பெறுகிறவர் ஒவ்வொருவரும், ஆரம்பத்தில் தருகின்ற உறுதிமொழி வாசகங்களில் ஒன்று: **"நான், எந்தவித வற்புறுத்தலும் இன்றி அறிவு விழித்த நிலையில் என் சொந்த விருப்பப்படியே உறுதிமொழிகளை வழங்கி சித்தரடியான் ஆகின்றேன். என்னுடைய உடல், பொருள், சொந்தம், சொத்து, உரிமை, ... முதலியவைகளை குருவிற்கு காணிக்கை ஆக்குகின்றேன். இவற்றை, அவர் தமது விருப்பப்படி எப்படி வேண்டுமானாலும் பயன்படுத்திக் கொள்ள உரிமை வழங்குகின்றேன். நான், குருவை மறுக்கவோ, வெறுக்கவோ, எதிர்க்கவோ, இழிக்கவோ, பழிக்கவோ முற்பட மாட்டேன்; என் முன்னால் பிறர் முற்படவும் விடமாட்டேன்.**

**நான், குருவிற்கு என்றென்றும் தாயாக, தாரமாக, தானீன்ற மகளாக உண்மையுடன் உழைத்திடுவேன். இது முக்காலும் சத்தியம். எல்லாத் தாத்தாக்களும், ஆத்தாக்களும் என்னை நம்பி ஏற்றுக் கொண்டு அருள் புரியுமாறு வேண்டிக் கொள்கிறேன்..."** குருபாரம்பரிய வாசகம். இதன்படிப் பார்த்தால் நம் நண்பர்களில் சிலர் குருதேவரின் மீது சாற்றுகின்ற குற்றச்சாட்டு முறையற்றது! நேர்மையற்றது! நீதியற்றது! முன்னுக்குப் பின் முரணானது! ... என்ற விமர்சனத்தோடு என் கருத்தை நிறுத்திக் கொள்கிறேன்.

7. நம்மை விட்டு விலகியவர்களில் சிலர் "*நமது குருதேவர் தமக்கு மிக நெருங்கிய நண்பர்களை [குறிப்பாக REC அடியான்களை] மட்டும் மண்ணுக்கும் விண்ணுக்கும் நடக்கும் போரில் ஈடுபடுத்தாமல் பாதுகாக்கின்றார். அதாவது, ஒருதலைச் சார்பாக, ஓரவஞ்சனையாக செயல்படுகின்றார். இதனால் அப்பாவியான அல்லது ஏமாளியான நாம்தான் குடும்பத்தைப் பகைத்துக் கொண்டும் வாழ்க்கையைப் பாழாக்கிக் கொள்கிறோம். எனவே, நாம் உடனடியாக குருதேவரை விட்டு விலகிடல் வேண்டும்*" என்று நமது குருதேவரை விமர்சனம் செய்து வருகின்றார்கள்.

இது, அவசர அலங்கோல விமர்சனமே. குருதேவர் மண்ணுக்கும் விண்ணுக்கும் போரை அறிவித்ததே REC அடியான்களான நான் (வேங்கட்டரமணன்), பொன்னுசாமி, சண்முகானந்தன் என்ற மூவரும்தான். மேலும் மண்ணுக்கும் விண்ணுக்கும் போரை நிகழ்த்துகின்ற தலைமைத் தளபதியே REC அடியானாகிய இரா.சண்முகானந்தன்தான். அத்துடன் ஏற்கனவே அருட்சேனைத் தளபதி என்று அறிவிக்கப் பட்டிருக்கும் கு.இரவிமணி B.Sc., B.Tech., அவர்களை பாதுகாக்க வேண்டும் என்ற நோக்கில் விட்டு விடவில்லை என்பதற்கு விளக்கமாக அவர் வடநாட்டில் இருந்து திரும்பிய உடன் குருதேவரின் பதினெட்டு (18) முழ நீளமுள்ள தலைப்பாகையையும், பிற பீடாதிபதி உடைகளையும் அவரை அணியச் செய்து நேரடியாக அருட்போரில் இறக்கி இருக்கின்றார். அவர்,

அருட்போரில் தன்னிகரற்ற துணிவையும், வீரத்தையும், தீரத்தையும் காட்டிப் போர் புரிந்ததால், கடந்த ஏழெட்டு ஆண்டுகளில் அவர் ஈட்டியிருந்த, சாதித்திருந்த சித்திகளையெல்லாம் அண்ட பேரண்டத்தவர்களுக்குப் பலியாகக் கொடுத்துள்ளார். இந்த முழுமையான வரலாற்றை அவரிடமே நேரில் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம். மற்றவர்களிடமும் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம். இது கற்பனை அல்ல, கனவு அல்ல என்று கூறுவதோடு இந்த விமர்சன பதிலை நிறுத்திக் கொள்கிறேன்.

8. *“நமது குருதேவர் எல்லா வல்லமைகளையும் பெற்றவரானால், அரசயோகம் செய்தவரானால், சித்தர்களுக்கு எதிர் மந்திரம் இல்லை என்று கூறுவது உண்மையானால் அவர் ஏன் அண்ட பேரண்டத்தவர்களுக்கு பயப்பட வேண்டும்? அடுத்தவர்களை அத்திற ஓச்சு செய்யச் சொல்லி அவர்களுக்குப் பின்னால் மறைந்திருக்கும் நிலைமை ஏன்? அண்டபேரண்டத்தவர் போர் புரிய மண்ணுக்கே வந்துவிட்ட பிறகு எல்லா வல்லமைகளையும் பெற்ற குருதேவர் உடனே ஏற்று போரைத் தொடங்காமல் 192 நாட்கள் தவணை கேட்டு ஒதுங்கிப் பதுங்கி இருப்பது ஏன்?.... இதற்குரிய உண்மையான விடைகளை நாமே எளிதில் புரிந்து கொள்ளலாம். அதாவது நமது குருதேவர் நம்மை எல்லாம் பலிகொடுத்து மிகப்பெரிய சத்திகளையும், சித்திகளையும் பெற ஏற்பாடு செய்து கொண்டு இருக்கிறார்... எனவே நாம் உடனடியாக அவரை விட்டு விலகி ஒதுங்கி இருப்பதே நல்லது”.*

இப்படி நமது குருதேவரைப் பற்றி வழங்கப்பட்ட விமர்சனத்தைப் பற்றி விமரிசிக்க வேண்டிய அவசியம் எனக்கு ஏற்பட்டு இருக்கின்றது. ஏனெனில், நமது குருதேவரின் வாழ்க்கைக் குறிப்பேடுகளும், நூற்றுக் கணக்கான நூல்களும், நூறாயிரக் கணக்கான அஞ்சல்களும், ஆயிரக்கணக்கான கட்டுரைகளும், அவர் கோழை அல்ல! அல்ல!! அல்ல!!! அல்லவே அல்ல!!!! என்ற பேருண்மையினைத் தெளிவாகப் பறை சாற்றுகின்றன. அவர் மாபெரும் மார்க்சியச் சிந்தனையாளரால்,

புரட்சியாளரால், புதுமை விரும்பியால், அறிவுலக மேதையால்.... நன்கு திட்டமிடப்பட்டு முறையான ஏட்டறிவும், பட்டறிவும் வழங்கப்பட்டு தேர்ச்சி பெற்றவர். இப்படிப்பட்ட அவர் பிறரை பலிகொடுத்தோ, பிறரை ஏணியாகவோ அல்லது தோணியாகவோ பயன்படுத்தியோ செயல்பட்டிட மாட்டார்! மாட்டார்!! மாட்டார்!!! அவர் தன்னுடைய வரலாற்றை ஒரு திறந்த புத்தகமாகவே வைத்து இருக்கின்றார். அவர், தன்னுடைய வாழ்க்கையை தெய்வீக சோதனை (The Test of Divinity) என்று அறிவித்தே துணிவோடும், பணிவோடும் வாழுகின்றார். அவர் தன் வாழ்க்கை வரலாற்றை இந்த யுகத்தின் வரலாறாகவும், மனித இனத்தின் முழுமையான அறிவியல் வரலாறாகவுமே செயலாக்கி வருகின்றார்...

இக்கருத்துக்களோடு மேற்கூறிய விமரிசனத்திற்கு எனது பதிலை நிறுத்திக் கொள்கிறேன். காலமின்மையால் விரிவஞ்சி அஞ்சலை உடனே முடிக்கின்றேன். இதனை இப்படி எழுதிப் பார்த்து உங்கள் முன் படிப்பதன் மூலம் என் உணர்வை முழுமைப் படுத்துகிறேன்.

இப்படிக்கு

**அன்பு**

**சித்தரடியான் இரா.செ.வேங்கட்டரமணன்.**

**//உண்மை நகல்//**

**//மூல நகல்: கையெழுத்துப் பிறதியாகக் கிடைத்தது.//**

# அருளாட்சி அமைக்கும் பணி

1200 ஆண்டுகளுக்குப் பின் அருளாட்சி அமைக்கும் பணி சோழமாதேவி திருமுன் பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி குருமகாசன்னிதானம் ஞாலகுரு சித்தர் கருவூரூரால் துவக்கப் படுகிறது.

கருநிலைகள், குருநிலைகள், தருநிலைகள், திருநிலைகள், தாத்தாக்கள் ஆத்தாக்கள், உலக அருளாளர்கள் வழங்கும் இறை மாட்சிச் செல்வங்கள் உறுதியாகத் தன்னம்பிக்கையை! மொழிப்பற்றை! இன ஒற்றுமையை! நாட்டுணர்வைச் செழித்தோங்கச் செய்யும்! செய்யும்!! செய்யும்!!!

அருளை அநுபவப் பொருளாகப் பெற்று அக, புற, இருளகற்றும் அருட்பெருஞ்சுடராக திகழச் சித்தர் நெறி பயில வாரீர்! வாரீர்!! வாரீர்!!!

பூசை மணியோசை எங்கும் ஒலிக்கட்டும்!
பூசை சங்கொலி எங்கும் கேட்கட்டும்!
பூசைமொழிகள் எங்கும் பரவட்டும்!
மதவழி விழிச்சிப் பணியே செழுச்சி தரும்!
இருட்டுகளும் திருட்டுகளும் மருட்டுகளும் விரட்டும் அருட்படை திரளட்டும்!
பாரதப் பண்பாட்டுப் பாரம்பரியக் கூறுபாடுகளைப் புதிய கட்டமைப்புக்களால் வளப்படுத்தி வலிமைப் படுத்துவோம்!

**ஓம் பராசத்தி நமச்சிவாய!**

**அருட்சேனைத் தளபதிகள்,**
**அருளாட்சி நாயகங்கள்,**
**அருளாட்சிப் பணியாளர்கள்.**

**//உண்மை நகல்//**
**//இதன் மூலநகல்: வேம்படிதாளம் சித்தரடியார் திரு சீ.மணி அவர்களின் கையெழுத்தில் கிடைத்தது.//**

**"அருளுலகில் சமசுக்கிருதத்தைப் பயன்படுத்துவது பெரிய பாவம், கொடிய தீட்டு, நெடிய சாபம்"** -- குருபாரம்பரிய வாசகம்.



"... இம்மண்ணுலக அருளாளர் வரிசையிலேயே முதன்முதல் அரசயோகத்தைத் துவக்கி மிகப்பெரிய வெற்றி நிலைக்குரிய சாதனை நிலையைத் தோற்றுவித்தவரும்; கருவறைக் கோபுரமுடைய **தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டியவருமான பதினோராவது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகா சன்னிதானம், ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரர் அவர்களே** போர்க்கோலம் பூண்டு, படை நடத்தி, வேலோச்சியும், வாள் வீசியும், அத்திறங்கள் எய்தும், குருதியாறு ஓடவிட்டும்தான் 'இந்து மறுமலர்ச்சி இயக்கம்' வெற்றி பெறுமாறு செய்தார். ... ..."

இவருக்கு அடுத்து 900 ஆண்டுகள் கழித்துப் 12வது பதினெண்சித்தர் பீடாதிபதியாகத் திருத்தோற்றம் எடுத்த ஞானாச்சாரியார் **ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரர்** அவர்களின் குருவாணைப் படி இந்துவேத இலக்கியங்கள் இதில் வெளியிடப் படுகின்றன. இவை **ஞாலகுரு** அவர்கள் அமைத்திட்ட கையெழுத்துப் பிறதி நூலகங்களில் தாள் நைந்து, எழுத்து மங்கி, அழிந்து கொண்டிருக்கும் நகல்களின் பிறதிகளாகவே வழங்கப் படுகின்றன.



**அம்மையப்பர்**


Published under the Divine Grace of His Holiness the 12th Pathinensiddhar Peedam, Gurudevar, Gnaalaguru Siddhar Arasayogi Karuvooraar by the **Anaathi Sankaraachaariyaar Peedam** Trust, (Regd) East Tambaram, Chennai.
Printed by Mr Sivaraman, Kamarajarpuram, East Tambaram. Cell: 09972130609. at Sri Vignesh Printers, Madurai.



**www.newsletters.gurudevar.org** **www.gurudevar.org**
**www.induism.org** ***Email:*** **indhuism@gmail.com**

www.books.gurudevar.org